# பொள்ளாச்சி நகராட்சி
## 08.09.2018 அன்று நடைபெற்ற சிறப்புக் கூட்ட தீர்மானம்

**1152)** அரசாணை எண்.GO.MS NO 73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்: 13.07.2018 மற்றும் அரசாணை எண் GO.MS NO 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள்: 27.07.2018 ஆகியவற்றின்படி 01.04.2018 முதல் அனைத்து மாநகராட்சிகள், அனைத்து நகராட்சிகள் மற்றும் அனைத்து பேரூராட்சிகளில் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், இந்நகராட்சியில் 2008-2009ம் ஆண்டு பொது சொத்து சீராய்வின்படி "A" மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு 2.80/-ம் "B" மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு 2.30/-ம், "C" மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு 1.80/-ம் "**D**" மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு 1.10/-ம், கீழ்க்காணும் அட்டவனைப்படி கீழ்க்காணும் தெருக்கள் அடிப்படை மண்டல மதிப்புகளுக்கு ஏற்றவாறு இருந்து வருகிறது.

மேலும், மேற்கண்ட அரசாணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.20555/2018/ஆர்1 நாள் 20.08.2018 ஆகியவற்றின்படி குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100% மிகாமலும், அரசுக் கட்டிடங்களுக்கு 50% மட்டும் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையின்படி, சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளும் பொருட்டு, மண்டல மதிப்பீடு செய்திட ஏதுவாக குழு (Committee) அமைக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு வாடகை மதிப்பீட்டின் அடிப்படையில் மண்டல அடிப்படை மதிப்பீடு (Zonal basic Value) செய்திடலாம் என குழு அறிக்கை (Commitee) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| "A" மண்டலம் வாடகை மதிப்பீட்டின்படி | ரூ. 5.58/- |
| "B" மண்டலம் வாடகை மதிப்பீட்டின்படி | ரூ. 5.06/- |
| "C" மண்டலம் வாடகை மதிப்பீட்டின்படி | ரூ. 4.91/- |

மண்டல மதிப்பீட்டுக்குழு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி, A,B மற்றும் C ஆகிய மண்டல மதிப்புகள் (வாடகை மதிப்பீட்டின்படி) அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கை ஆகியவற்றில் தெரிவித்துள்ளதை விடவும் அதிகப்படியாக உள்ளது.

எனவே, மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கை ஆகியவற்றில் தெரிவித்துள்ளவாறே, குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% மிகாமலும், குடியிருப்பு அல்லாத பிற கட்டிடங்களுக்கு 100% மிகாமலும், அரசுக் கட்டிடங்களுக்கு 50% மட்டும் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள ஏதுவாக மண்டல அடிப்படை மதிப்பினை 50% மட்டும் உயர்த்தி கீழ்க்கண்டவாறு (Zonal basic Value) அடிப்படை மண்டல மதிப்பு நிர்ணயம் செய்திட மன்றப்பொருள் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| "A" மண்டலம் | ரூ. 4.20/- |
| "B" மண்டலம் | ரூ. 3.45/- |
| "C" மண்டலம் | ரூ. 2.70/- |

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்